Koviloor Digital Library

மாதவமாலை

IMS0728

தொகுப்பு:

ராய. சொ.

வெளியீடு:

அபிசீனியா. பழ. நாச்சியப்பன்.

காரைக்குடி.

Koviloor Digital Library

Koviloor Digital Library

மாதவமாலை

தொகுப்பு :
ராய. சொ.

ஹிந்துமதாபிமான சங்கம் ஓம் காரைக்குடி

சோபகிருது, தை, எ. 20-1-64
இலக்குமி - மாதவன்

காப்புக்கட்டுப் புதுமை

உகசுசு

வெளியீடு:
அபிசீனியா. பழ. நாச்சியப்பன்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

சிவமயம்.

மாதவமாலை

நூல்முகம்

இந்நூல் திருமாலைப்பற்றிய ஐம்பத்தொரு பாடல் கொண்டது. வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தில், சருக்கத் தொடக்கத்தில், பாடிய திருமால் வணக்கப் பாடல் முப்பத்தேழும், கண்ணன் தூதில், துரியோதனன் சதிசெய்த போது, கண்ணபிரான் எடுத்த பேருருக்கண்டு, அவையோர் அஞ்சிக் கூறிய பாடல் இரண்டும், கன்னன் இறுதிக் காலத்தில் கண்ட கடவுட் காட்சிப் பாடல் இரண்டுமாக வில்லிபாரதப் பாடல் நாற்பத்தொன்றும், பெருந்தேவனார் பாரத வெண்பாவில் திருமாலைத் துதித்துப் பாடிய பாடல் ஏழும், இளங்கோவடிகள் திருமாலைப் பாராட்டிய பாடல் மூன்றும் ஆக, ஐம்பத்தொரு பா, இந்நூலை அலங்கரிக்கின்றது.

Koviloor Digital Library

பாடல் அனைத்தும் மிக அருமையானவை. மாதவனைப் பாராட்டும் பாமாலையாகிய இந் நூலுக்கு ''மாதவமாலை'' என்று பெயர் கொடுத் திருக்கின்றேன். அரும்சொற் பொருளும், இன்றியமையாத சிலகுறிப்புக்களும் ஆங்காங்கே தரப்பெற்றிருக்கின்றன.

இந்நூலில் சிறப்பான இடம் வில்லிபுத்தூர் ஆழ்வாருக்கே. வில்லிபுத்தூர் ஆழ்வாரின் அருமை மைந்தர் ''வரந்தருவார்'' என்ற தந்தையினும் மிக்க பெரும்புலவர், தந்தையைப் பாராட்டிய ஒரு நல்ல பாவை இங்கே தருகின்றேன்.

தென்னர், சேரலர், செம்பியர்
எனப்பெயர் சிறந்த
மன்னர் மூவரும் வழங்கிய
வரிசையால் உயர்ந்தோன்;

Koviloor Digital Library

முன்னர் எண்ணிய முத்தமிழ்ப்
பாவலர் எவரும்
பின்னர் வந்தொரு வடிவுகொண்
டனரெனப் பிறந்தோன்.

வரந்தருவார் தமிழினிடத்துக்கொண்ட பெருங் காதலைப் புலப்படுத்தும் ஒரு அரிய பாடலும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

பொருப்பிலே பிறந்து, தென்னன்
புகழிலே கிடந்து, சங்கத்து
இருப்பிலே இருந்து, வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை,
நெருப்பிலே நின்று, கற்றோர்
நினைவிலே நடந்து,ஓர் ஏன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்.

Koviloor Digital Library

தமிழ்மகள், பொதிகை மலையிலே பிறந்தாள்; பாண்டியன் புகழிலே கிடந்தாள்; சங்கத்து அரியணையில் இருந்தாள்; திருஞான சம்பந்தப் பெருமான் தேவாரப் பாடல் எழுதப்பெற்ற ஏட்டிலே, வைகை ஆற்றிலே தவழ்ந்தாள்; அப்பெருமான் பாசுரத்தில் நெருப்பிலே பசுமை யோடு நின்றாள்; கற்றோர் நினைப்பிலே நடந்தாள்; வராக அவதாரம் எடுத்த ஒப்பற்ற திருமாலின் தந்தத்திலே பழகிய நிலமகளின் இடுப்பிலே வளருகின்றாள்.

இந்நூலை, எனது ஆருயிர் அன்பர்-பொதுப் பணி எதிலும் பங்குபெற்றுச் சிறப்பாகச் செய்து முடிக்கும் திறமைவாய்ந்தவர் - நாட்டு விடுதலை யின் பொருட்டுச் செயற்கரிய செய்த தீரர் நேதாஜியின் போர் வீரரில் ஒருவர்—அபிசீனியா பழ. நாச்சியப்பனார், தமது மைந்தன் திருநாவுக் கரசனின் மக்கள் 'புதுமை விழா' நினைவாக வெளியிடுகின்றார். அவருக்கும், அவர் குடும்பத்தாருக்கும் என் வாழ்த்து உரித்தா கின்றது.

Koviloor Digital Library

அபிசீனியா நாச்சியப்பர் தெய்வபக்தி நிறைந்தவர். அன்னுர் சிவபெருமானிடத்தும். நாராயணமூர்த்தி இடத்தும் நிறைந்த பற்று உடையவர். எனினும், திருமாலிடத்துப் பெருங் காதல் கொண்டவர். அண்மையில் அரியக்குடி சீனிவாசப்பெருமாளுக்குப்பணிபுரியும் நிருவாகக் குழுவில் இடம் பெற்றுள்ளார். அன்னுர், தமது பேரர் மூவரையும், 'மாதவன்', 'கேசவன்', 'இராகவன்' என்ற பெயர்களாலும், பேத்தியை ''இலக்குமி'' என்ற பெயராலும் அழைத்து மகிழ்பவர்.

இந்நூல், திருமகள் கேள்வனுகிய மாதவனுக்கு உரியது என்பதோடு, பேரர்களில் மூத்தவனுகிய ''மாதவ'' னின் புதுமையில் வழங்கப் பெறுவதனுலும் ''மாதவமாலை'' என்ற பெயர் பெற்றது பொருத்த முடைத்து.

நூலைப் படித்து, திருமால் புகழ்பருகி அன்பர்கள் பயன் பெறுவாராக! புதுமைக் குழந்தைகளுக்கு, ''பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு!''

ராய. சொ.

Koviloor Digital Library

Koviloor Digital Library

வில்லி புத்தூர் ஆழ்வார்

Koviloor Digital Library

Koviloor Digital Library

அருமறை முதல்வனை,
ஆழி மாயனை,

கருமுகில் வண்ணனை,
கமலக் கண்ணனை,

திருமகள் தலைவனை,
தேவ தேவனை,

இருபத முளரிகள்
இறைஞ்சி, ஏத்துவாம்.

அருமறை: அரியவேதம். ஆழி: சக்கரம், முகில்:மேகம்.
கமலம்: தாமரை. முளரி: தாமரை.

Koviloor Digital Library

எக்கடலும், எக்கிரியும்,
எவ்வுலகும், உலகில்

தக்கபல யோனிகள்
சராசரம் அனைத்தும்,

மிக்கவிதி யால்விதிசெய்
விதியினை விதிக்கும்

செக்கமல நாபிமுகில்
சேவடி துதிப்பாம்.

கிரி: மலை. முதல்விதி: வினை. இரண்டாவதுவிதி: உண்டாக்குதல். மூன்றுவதுவிதி: பிரமன். நான்காவது விதி: தோற்றுவித்தல். செக்கமல நாபி முகில்: சிவந்ததாமரைபோன்ற உந்தியையுடையதிருமால்.

Koviloor Digital Library

தேடிய அகலிகை
சாபம் தீர்த்ததாள்,

நீடிய உலகெலாம்
அளந்து நீண்டதாள்.

ஓடிய சகடுஇற
உதைத்தும் பாம்பின்மேல்

ஆடியும் சிவந்ததாள்
என்னை ஆண்டதாள்.

தேடிய அகலிகை: தன்வரவை எதிர்பார்த்துக்கொண்டு இருந்த அகலிகை. சகடு: வண்டிவடிவமான ஒரு அசுரன். இற: அழிய. தீர்த்த தாளும், நீண்ட தாளும் ஆகிய பாம்பின் மேல் ஆடியும் சிவந்த தாள் என்னை ஆண்ட தாள் என முடிக்க. 'சாடஎடுத்தது' என்ற அப்பர் சுவாமிகளின் தேவாரமும் இப்பாடலும் ஒத்த கருத்துடையன.

Koviloor Digital Library

பொய்யாத தவமுனிபின்
போயருளி, தாடகைதன்

மெய்ஆவம் நிகர்என்ன
வெஞ்சரத்தால் அழுத்தியபின்

மைஆழி முகில்வண்ணன்
வாங்கியன, பூங்கமலக்

கையாலும் ஒருசாபம்;
காலாலும் ஒருசாபம்.

பொய்யாததவமுனி: பொய்க்காத தவமுடைய விசுவாமித்திரன். ஆவம்: அம்பறுத்தூணி. மைஆழி: கரிய கடல். முகில்வண்ணன்: இராமன். வாங்கியன: (இரண்டுபொருள்) 1. வளைத்தன. 2. கவர்ந்தன. முதல் 'சாபம்': மிதிலையில் வளைந்தன. (சாபம்: வில்) இரண்டாவது 'சாபம்': அகலிகைசாபம்.

Koviloor Digital Library

கோயில்ஆ ளுடையபைங்
கொண்டலார் கண்துயில்

பாயலாய் வாழநீ
பாக்கியம் செய்ததுஎன்?

'தீஅலாது உவமைவேறு
இல்'என, தீயநின்

வாய்எலாம் நஞ்சுகால்
வாள்எயிற்று உரகமே!

கோயில்: திருவரங்கம். பைங்கொண்டல்: பசியமேகம். கண்துயில்பாயல்: உறங்கும் படுக்கை. நஞ்சுகால்: நஞ்சைக் கக்குகின்ற. வாள்எயிற்றுஉரகம்: ஒளி பொருந்திய பற்களையுடைய பாம்பு.

Koviloor Digital Library

தொழுவார்தம் வினைதீர, முன்கோலம்
ஆய்வேலை சூழ்பார்எயிற்று

உழுவானை, நல்நாமம் ஒன்றுயி
னும்கற்று,ஓர் உருஓதினுர்

வழுவாத சுரர்ஆக, நரர்ஆக,
புள்ஆக மாஆக,புன்

புழுவாக, ஒன்றில் பிறந்தாலும்
நரகில் புகார்காணுமே.

வினைதீர: வினைநீங்க. கோலம்: பன்றி. பார்எயிற்று உழுவானை: உலகைக் கொம்பினுல் தோண்டியவனை. சுரர்: தேவர். நரர்: மனிதர். புள்: பறவை. மா: விலங்கு.

Koviloor Digital Library

கருமா முகில்கோலம் நெஞ்சத்து
இருத்தும் கருத்துஎய்துமேல்

அருமா தவன்தானும் அவன்;முத்தி
தருகைக்கும் அவனேகுரு;

தருமாலை மணம்நாறு தாளானை
வண்டுஏறு தண்ணந்துழாய்

மருமாலை புனைகின்ற திருமாலை,
அல்லாது வல்லார்கள்யார்?

கரியசிறந்த முகிலனைய திருமால் வடிவத்தை நெஞ்சத்து இருத்துகின்றவன் எவனோ அவனே அருமாதவன். முத்தி கொடுக்கும் குருவும் அவனே என்பது பாட்டின் கருத்து.

Koviloor Digital Library

பாண்டவர்கள் புரிந்ததவப் பயன்ஆகி
அவதரித்து, பகைத்து மேன்மேல்
முண்டவினை முழுவதுவும் முனைதோறும்
முரண்முறுக்கி, முகில்பு காமல்
காண்டவமும் கனல்வயிற்றுக் கனல்தணிய
நுகருவித்துக் காக்கு மாறே
பூண்டருள்எம் பெருமானைப் போற்றுவார்
எழுபிறப்பும் மாற்று வாரே.

முனை: போர்க்களம். முரண்முறுக்கி: வலியைஅழித்து. முகில்: மேகம். காண்டவம்: இந்திரனுக்குரிய வனம். கனல் வயிற்றுக் கனல்: தீயிடைத்தோன்றிய பசித்தீ.

Koviloor Digital Library

சேய பங்கயச் சிறுவிரல் அங்கையில்
திரட்டிய நறுவெண்ணெய்

ஆயர் மங்கையர் இடஇட அமுதுசெய்து
ஆடிய திருக்கூத்தும்

நேய மும்,குறு முறுவலும், புரிந்துபார்த்து
அருளிய நெடுங்கண்ணும்

மாய வன்திரு வடிவமும், அழகும்என்
மனத்தைவிட்டு அகலாவே.

சேய பங்கயச் சிறுவிரல் அங்கை: சிவந்ததாமரை அனைய சின்ன விரல்கள் கொண்ட அழகிய கை. ஆயர்மங்கையர்: இடைப்பெண்கள்.

Koviloor Digital Library

பேர்படைத்த விசயனுடன் மும்மைநெடும்
பிறவியினும் பிரியான் ஆகி,

சீர்படைத்த கேண்மையினால், தேர்ஊர்தற்கு
இசைந்துஅருளும் செங்கண் மாலை,

பார்படைத்த சுயோதனற்கு, 'படைஎடேன்
அமரில்!'எனப் பணித்த கோவை,

கார்படைத்த நிறத்தோனை, கை தொழுவார்
பிறவுஆழிக் கரைகண் டாரே.

கேண்மை: உறவு. சுயோதனன்: துரியோதனன். பணித்தகோ: சொல்லியதலைவன். பிறவுஆழிக்கரை: பிறவி என்ற கடலின்கரை.

Koviloor Digital Library

மீனம் ஆகியும், கமடம்அது ஆகியும்,
மேருவை எடுக்கும்தாள்

ஏனம் ஆகியும், நாஅரி ஆகியும்
எண்அருங் குறள்ஆயும்

கூனல் வாய்மழுத் தரித்தகோ ஆகியும்,
அரக்கரைக் கொலைசெய்த

வான நாயகன் ஆகியும் நின்றமால்
மலரடி மறவேனே.

கமடம்: ஆமை. ஏனம்: பன்றி. நரஅரி: மனிதசிங்கம். குறள்: வாமனன், கூனல் வாய்மழுத் தரித்தகோ: வளைந்த வாயையுடைய மழுவேந்திய பரசுராமன். அரக்கரைக் கொலை செய்த வானநாயகன்: இராம பிரான்.

Koviloor Digital Library

அராஅணை துறந்து போந்து,அன்று
அசோதைகண் களிப்ப, நீடு

தராதலம் விளங்க, வெண்ணெய்த்
தாழிசூழ் தர,நின்று ஆடி,

குராமணம் கமழும் கூந்தல்
கோவியர் குரவை கொண்ட

புராதனன் தனையே ஏத்தும்
புனிதர்தாள் போற்றி செய்வாம்.

அரா அணை: பாம்புப் படுக்கை. தராதலம்: பூவுலகம். தாழி: பாத்திரம். குரா: ஒருவகைப்பூ. கோவியர்: இடைப் பெண்கள். குரவை: ஓர்கூத்து. புராதனன்: பழமையானவன்.

Koviloor Digital Library

கயம்படு மனத்தன் ஆய
கண்இலா அரசன் மைந்தன்
வயம்பட நினைந்து, கங்குல்
வகுத்ததோர் சூழ்ச்சி தன்னால்,
பயம்படு மல்ல ரோடு
பாதலம் மடிய நீண்ட
சயம்படு கமலத் தாள்என்
தலைமிசை அகல்கி லாவே.

கயம்படு: கயமைபொருந்திய. கண்இலாஅரசன்: திருதிராட்டிரன். வயம்: வெற்றி. கங்குல்: இரவு. சூழ்ச்சி: வஞ்சகம். பயம்: அச்சம். மல்லர்: போர்வீரர். சயம்படுகமலத்தாள்: வென்றிகொண்ட தாமரைப்பாதம்.

Koviloor Digital Library

குன்றுஎடுத்து ஆயர் மாதர்
குரவைகொண்டு, ஒருவி ளாவில்

கன்றுஎடுத்து எறிந்து, வெய்ய
காளியற்கு இருதாள் நல்கி,

அன்றுஎடுத்து இறுத்த வில்லே
அணையவில் விழவுகாண்பான்

சென்றுஎடுத்து இறுத்து நின்ற
செங்கண்மால் எங்கள் கோவே.

குன்று: ஈண்டு கோவர்த்தனம் என்றமலை. ஒரு விளா வில் கன்றுஎடுத்து எறிந்து: விளாமர வடிவமாக நின்ற ஒரு அசுரன் மீது கன்று வடிவமாக வந்த ஒரு அசுரனைத் தூக்கி எறிந்து. காளியன்: ஓர்பாம்பு. அன்று எடுத்து இறுத்தவில்: இராமன் ஒடித்தவில். வில்விழவு: பாஞ்சாலிமணவிழா.

Koviloor Digital Library

மேவரு ஞானு னந்த வெள்ளம்ஆய்,
 விதித்தோன் ஆதி

மூவரும் ஆகி, அந்த மூவர்க்கும்
 முதல்வன் ஆகி,

யாவரும் யாவும் ஆகி, இறைஞ்சுவார்
 இறைஞ்ச, பற்பல

தேவரும் ஆகி நின்ற செங்கண்மால்
 எங்கள் கோவே.

விதித்தோன் ஆதிமூவர்: பிரமன் முதலியமூவர்.

Koviloor Digital Library

தம்தம் உறியில், அவர்வைத்த
தயிர்,பால், வெண்ணெய் எட்டாமல்

குந்தி உரலின் மிசைஏறி
இளங்கோ வியர்முன் கூத்தாடி,

நந்தன் மனையில் அசோதைஇரு
நயனம் களிக்க விளையாடும்

மைந்தன் இருதாள் ஒருநாளும்
மறவா தாரே பிறவாதார்.

தம்தம்: தங்கள் தங்களுடைய. குந்தி: உட்கார்ந்து. மிசை: மீது. இளங்கோவியர்: இளம்இடைப் பெண்கள்.

Koviloor Digital Library

பூத்த நாபிஅம் தாமரைப்
பூவில் வந்து,பல் பூதமும்

சேர்த்த நான்முகப் புனிதனும்
முனிவர் யாவரும் தேவரும்

ஏத்த, நாலுவே தங்களும்
தேட நின்றதாள் எம்பிரான்

பார்த்தன் மாமணித் தேர்விடும்
பாகன் ஆனதுஎப் பான்மையே!

நாபிஅம் தாமரைப்பூ: உந்திக்கமலம்; அதாவது தாமரைப்பூப் போன்ற கொப்பூழ். நான்முகப் புனிதன்: நான்கு முகத்தை உடையபிரமன். ஏத்த: இறைஞ்ச. பாகன்: சாரதி. எப்பான்மை: என்ன தன்மை.

Koviloor Digital Library

காயமும் புலனும் அந்தக் கரணமும்
ஆகி, எல்லாத்
தேயமும் பரந்து நின்று
மீளவும் சித்தும் சுத்த
மாயமும் ஆகி, நீங்கி, வருபெரு
ஞான னந்தம்
ஆய எம் பெருமான் என்னை ஆண்டருள்
ஆழி யானே.

காயம்: உடம்பு. புலன்: மெய், வாய், கண், மூக்கு, செவி. அந்தக்கரணம்: மனம், புத்தி, சித்தம்.

Koviloor Digital Library

சங்கைஇ லா வகை யம பட
ரால்உயிர் தளர்பொழு தத்து,அருகே
மங்கையர் சூழஇ ருந்துஅழுது,
உள்ளம் மயக்கினும் யான்மறவேன்;
கங்கையும், நான்மறை யும்துள-
-வும்கமழ் கழல்இணை யும்திருமால்
அங்கையில் மீதொளிர் சங்கமும்
நேமியும், அஞ்சன மேனியுமே.

சங்கை: அளவு. யமபடர்: காலதூதர். கழல்இணை: இரண்டு திருவடி. அஞ்சனமேனி: கரிய திருமேனி.

Koviloor Digital Library

அரிய கங்குலில் அன்னைதன் வடிவுகொண்டு
அலகை ஆகிய நங்கை,

பரிவு பொங்கவந்து எடுத்துஅணைத்து, உவந்துஉளம்
பரிந்து,உ டன்பா ராட்ட,

உருகும் மாமுலைப் பாலுடன் அவள்உயிர்
உண்டுஅ ழும்முருகு ஆர்மெய்க்

கரிய கோவலன் செய்யதாள் மலர்கள்என்
கருத்தை விட்டுஅக லாவே.

கங்குல்: இரவு. அலகை: பேய். பரிவு: அன்பு. பரிந்து: விரும்பி. முருகுஆர்: அழகுபொருந்திய. மெய். உடம்பு.

Koviloor Digital Library

வேதமும், வேதம் விளம்புமெய்ப் பொருளும்,
அப்பொருள் விதங்களும், பஞ்ச

பூதமும், புலனும், புலன்களின் பயனும்,
அப்பயன் பொலிவுற நுகரும்

ஞாதமும், உலகம் படைத்துஅளித்து, அழித்து,
ஞானமாய் அகிலமும் நிறைவுற்று,

ஆதியுப் நடுவும் முடிவுமாய் நின்ற
ஆதியான் அடிஇணை பணிவாம்.

பஞ்சபூதம்: நிலம், நீர், காற்று, நெருப்பு, விண்.
புலன்: மெய், வாய், கண், மூக்கு, செவி.
புலன்களின் பயன்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். ஞாதம்: அறிவு.

Koviloor Digital Library

ஞானம் ஆகிய பரம்பர அமிழ்தமாய்,
நவிர்அ றும்மயக்கு ஆகி,

வானம் ஆய்உடன் வாயுவாய், தேயுவாய்
வனமும் ஆய்மண் ஆகி,

தான மாமறை முறைமையின் பற்பல
சராச ரங்களும் ஆகி,

ஏனம் ஆய்இவை அனைத்தையும் மருப்பினுல்
ஏந்தி னுன்எனை ஆண்டோன்.

பரம்பரம்: மேலான நவிர்: குற்றம். வாயு: காற்று. தேயு: நெருப்பு. வனம்: நீர். தானம்: கொடை. சரம்: அசையும் பொருள். அசரம்: அசையாப்பொருள். ஏனம்: பன்றி. மருப்பு: கொம்பு.

Koviloor Digital Library

அழுதும்,வாள் முறுவல் அரும்பியும், களித்தும்,
ஆடியும், பாடியும், மகிழ்ந்தும்,

தொழுதும்,ஆ தரித்தும், விழுந்தும்,மேல் எழுந்தும்
துதித்திட, தன்பதம் தருவான்

முழுதும்ஆய், ஓங்கும் முச்சுடர் ஆகி,
மூலம்ஆய், ஞாலம்ஆய், விண்ஆய்,

எழுதொணு மறைக்கும், எட்டொணு வடிவத்து
எம்பிரான், உம்பர்நா யகனே.

வாள்: ஒளி. முறுவல்: பல் முச்சுடர்: அரி. அரன். அயன். எழுதொணு மறை: எழுதமுடியாதவேதம்.

Koviloor Digital Library

அம்கையில் நேமி, சங்கு,வாள், தண்டோடு
அடல்சாரா சனம்தரித்து அருள்வோன்,

சங்கைஇல் மறைகள் ஆயிரங் களுக்கும்
சாற்றுதற்கு அரியதத் துவத்தோன்,

கங்கையின் அறலும், காளியன் முடியும்,
காளிந்திக் கரையுமே, கமழும்

பங்கய மலர்கள் இரவும்நன் பகலும்,
பணிந்து,பா டுதும்அவன் புகழே.

நேமி: சக்கரம். தண்டு: கதை. அடல்சராசனம்: வலியவில். சங்கை இல்: அளவற்ற.
கங்கையின் அறல்: கங்கைநீர்.
காளியன்முடி: காளிங்கன் என்ற பாம்பின் உச்சி.
காளிந்தி: ஓர் ஆறு. கமழும்: மணக்கும்.
பங்கய மலர்கள்: திருவடித் தாமரைகள்.

Koviloor Digital Library

படர்ந்து கானகம் திரிந்து, மீண்டுஅன்புடன்
பணிந்த பஞ்சவர்க் காக,

கடந்த ஞானியர், கடவுளர், காண்கலாக்
கழல்இணை சிவப்பு ஏற,

தொடர்ந்து நான்மறை பின்செலப் பன்னக
துவசன் மாநகர்த் தூது

நடந்த நாயகன் கருமுகில் வண்ணம்என்
நயனம் விட்டுஅக லாதே.

பஞ்சவர்: பாண்டவர் ஐவர். காண்கலா: காணமுடியாத. கழல்இணை: வீரச்சிலம்பணிந்த இரண்டுதிருவடி. பன்னக துவசன்: பாம்புக்கொடியையுடைய துரியோதனன். நயனம்: கண்.

Koviloor Digital Library

பேராறு முழ்கி, மறைநூல் பிதற்றி
மிடறும் பிளந்து, பிறவித்

தூர்ஆறு மாறு நினையாமல், உங்கள்
தொழிலே புரிந்த சுமடீர்!

ஓர்ஆறு பேத சமயங்க ளுக்கும்
உருவாகி நின்ற ஒருவன்

ஈர்ஆறு நாமம் உரைசெய்து மண்கொடு
இடுவார்கள் காணும் இமையோர்.

பேராறு முழ்கி: பெரிய ஆற்றில்குளித்து. மிடறும்பிளந்து: தொண்டை வெடித்து. பிறவித்தூர்: பிறப்பின் வேர். மண்கொடு இடுவார்: திருமண் இட்டுக் கொள்வார்.

Koviloor Digital Library

அரியதண் கலைவாள் மதியமும் கொதிகொள்
ஆலமும் தனதுஇடத்து அடக்கி

உரியஒண் கங்கா நதிக்குஒரு பதியாய்,
உரைபெறும் உயர்மகோ ததியில்

பரியதிண் சிலையோடு அம்புஎலாம் முகந்து,
பற்குனப் பொருப்பிடைப் பொழியும்

கரியபைம் புயலைக் கைதொழும் அவரே
கருவிலே திருவுடை யவரே.

இப்பாடல் கடலுக்கும் சிவபெருமானுக்கும் உவமை கூறுவது. திங்களையும், நஞ்சையும் கடல் அடக்கிக் கொண்டிருந்தது. அதைச் சிவபெருமானும் அடக்கி இருக்கின்றான். கெங்கைக்குக் கடல் கணவன். சிவனும் கணவனே. பதி: கணவன். மகோததி: கடல். பரிய: பெரிய. சிலை: 1 வில். 2. கல். அம்பு: 1. பாணம். 2. நீர். பற்குனப் பொருப்பு: பார்த்தனாகியமலை. கரியபைம்புயல்: மேகமாகிய கண்ணன். கருவிலே திருவுடையார்: பிறவிச் செல்வம் பெற்றவர்.

Koviloor Digital Library

சித்துஅ சித்தொ டுஈசன் என்று
செப்பு கின்ற முவகைத்

தத்து வத்தின் முடிவு கண்ட
சதுர்ம றைப்பு ரோகிதன்

கொத்துஅ விழ்த்த சோலை மன்னு
குருகை ஆதி நெஞ்சிலே

வைத்த முத்தி நாதன் அன்றி
வான நாடர் முதல்வன்யார்?

சதுர்மறைப்புரோகிதன்: நான்கு வேதங்களையும் அறிந்த ஆச்சாரியன். அவனே குருகைப் பிரான். அந்த நம்மாழ்வார் உள்ளிட்ட ஆழ்வார்கள் மனத்திலே பதித்த முத்திநாதனாகிய திருமாலைத்தவிர தேவ தேவன் இல்லை என்பது இப்பாடலின் கருத்து.

Koviloor Digital Library

எந்த எந்த யோனி பேதம்
எங்கும் எங்கும் உள்ளன,

அந்த அந்த யோனி தோறும்
ஆவி ஆன தன்மையைச்

சிந்தை யின்கண் ஒருக ணத்தில்
நிகழு மாறு, தேவர்கோன்

மைந்தன் உய்ந்தி டப்பு கன்ற
வள்ளல் தாள்வ ணங்குவாம்.

ஒருகணத்தில்: இமைப்பொழுதில். தேவர்கோன் மைந்தன்: பார்த்தன். உய்ந்திட: கடைத்தேற. புகன்றவள்ளல்: கீதையருளிய கண்ணபிரான்.

Koviloor Digital Library

ஒருகு லத்திடை அவதரித் து,அணி
பொதுவர் சிற்குடில் உறைவதுஓர்

மரக தப்புயல் தனைஎ டுத்துஒரு
மகவுள னத்தனது இறுதியால்

அரிது பற்றிய அலகை செற்றிட,
அணிமு லைப்பயம் நுகர்வுரு,

மருதுஇ டைத்தவழ் பொருஇல் வித்தகன்
மலர்அ டிக்கண் வழுத்துவாம்.

பொதுவர்: இடையர். மரகதப் புயல்: பசியமேகம்போன்ற கண்ணன். இறுதி: முடிவு. அலகை: பேய். செற்றிட: அழிய. முலைப்பயம்: முலைப்பால். நுகர்வுரு: உண்டு. மருது: மருதமரம்.

Koviloor Digital Library

வலியில் அன்று தந்தை செற்ற
மைந்த னுக்கு வந்தபேர்
நலிவுஎ லாம்அ கற்றும் நாமம்;
நால்-இ ரண்டுஎ ழுத்துடன்
பொலியும் நாமம் மறைகள் சொன்ன
பொருள்வி ளக்கும் நாமம்முன்
கலியன் எங்கள் மங்கை ஆதி
கண்டு கொண்ட நாமமே.

வலி: ஆற்றல். தந்தை: இரணியன். செற்ற: சினந்த. மைந்தன்: பிரகலாதாழ்வான். பேர்நலிவு எலாம்: பெரியதுயரத்தையெல்லாம். நாமம்: "ஓம் நாராயணாய நம". நாலிரண்டு எழுத்துடன் பொலியும் நாமம்: எட்டு எழுத்தோடு விளங் கும்நாமம். முன்: அந்த நாளில். கலியன் எங்கள் மங்கை: கலியனாகிய எங்கள் திருமங்கை மன்னன். 'நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தை அப்படியே மனத்தில் கொண்டு, 'மங்கைஆதி கண்டு கொண்ட நாமமே' என்றார் வில்லி புத்தூராழ்வார்.

Koviloor Digital Library

மாதுலன் ஆகியும் ஏதிலன் ஆகியும்
வஞ்சன் கஞ்சன் வரவிட்ட

பூதனே தன்உயிர் முலைபொழி பாலொடு
போதர உண்ட புயல்வண்ணு!

மாதவ! யாதவ! வாசவ! கேசவ!
மாயா! ஆயா! மதுசூதா!

ஆதியும் அந்தமும் ஆகிய நின்புகழ்
அல்லாது உரையேன் அடியேனே.

மாதுலன்: கஞ்சமாமன். ஏதிலன்: அயலான். பூதனை: ஓர்பேய். போதர: ஒருசேர. யாதவன்: இடையன்.

Koviloor Digital Library

ஈர்ஒரு பிறப்பின் ஒருசிறு குறளாய்,
யாவரும், தேவரும் வியப்ப,

கார்ஒரு வடிவு கொண்டெனச் சென்று
காவல்கூர் மாவலி அளித்த

நீர்ஒரு கரத்தில் வீழும்முன், தரங்க
நீல்நிற மகரநீர் உடுத்த

பார்ஒரு கணத்தில் அளவிடும் கமல
பாதனுர் நாதனுர் நமக்கே.

ஈர்ஒருபிறப்பு: அந்தணவடிவம். குறள்: வாமனம். மாவலி: மகாபலிச் சக்கரவர்த்தி. தரங்கம்: கடல் மகரம்: கடல். கணம்: நொடிப்பொழுது.

Koviloor Digital Library

மீன்,ஆமை, கோலம்,நெடு நரசிங்கம் ஆகிநிலம்
விரகால் அளந்த குறளாய்

ஆறுது சீறும்மழு, வல்வில்லும், வெல்லும்முனை
அலம்உற்ற செங்கை யவராய்

வான்நாடர் வந்துதொழ, மண்நாடர் யாவரையும்
மடிவிக்க வந்த வடிவாய்

நாலுவி தம்கொள்பரி ஆள்ஆக நின்றுஅருளும்
நாராய ணாய நமவே!

இப்பாடலில் தசாவதாரம் கூறப்பட்டிருக்கின்றது.
கோலம்: பன்றி. குறள்: வாமனாவதாரம். மழு: கோடரி. (பரசுராமனுக்குரிய படை) வில்: கோதண்டம். (இராமனுக்குரியது) அலம்: கலப்பை. (பலராமன் ஆயுதம்) மண்நாடர் யாவரையும் மடிவிக்க வந்தவடிவம்: பூபாரம் தீர்க்கத் தோன்றிய கண்ணன். பரிஆள்: கல்கி.

Koviloor Digital Library

சீத நாள்மலர்க் கோயில் மேவுசெந்
திருவின் நாயகன், தேவ நாயகன்,

வேத நாயகன், பூத நாயகன்,
விரத நாயகன், விபுத நாயகன்,

போத காதிபன், முதலை வாயிடைப்
பொறைத ளர்ந்து,முன் பொதுவி லேநினைந்து

'ஆதி மூலமே!' என்ன, முன்வரும்
ஆதி நாயகன் அடிவ ணங்குவாம்.

சீதம்: குளிர்ச்சி. செந்திரு: திருமகள். போதகாதிபன்: யானைத்தலைவன் (கஜேந்திரன்) பொறை: வலிமை.

Koviloor Digital Library

மல்கொண்டு வகுத்தனைய சிகரத் திண்தோள்
வாள்அரக்கன் குலத்தோடும் மடிய, முன்னம்

வில்கொண்டு, சரம்தொடுத்து, புரையில் கேள்வி
விண்ணவர்தம் துயர்தீர்த்த வீர ராமன்

கல்கொண்ட அகலியைதன் உருவம் மீளக்
கவின்கொள்ளக் கொடுத்ததிருக் கமல பாதம்

சொல்கொண்டு துதித்து,எழுந்து, துள்ளி, நாளும்
தொழுமவரே, எழுபிறவித் துவக்குஅற் றூரே.

மல்: மல்யுத்தம். சிகரம்: உச்சி. அரக்கன்: இராவணன்.
சரம்: அம்பு. புரை: குற்றம் கவின்: அழகு.
துவக்கு: தொடர்பு.

Koviloor Digital Library

உரலும் வேதமும் தொடர, நந்தகோன்
உடன்அசோதைகண்டு உருக, வாழ்வுகூர்

தரணி மீதுசெங் கையும், மாமுழந்
தாளும் வைத்துவைத்து ஆடும் மாயனார்,

விரவி நின்றமா மருதி னூடுதாம்
மெத்தெ னத்தவழ்ந் தருளி, மீளவும்

புரியும் நீள்கடைக் கண்ணும் வண்ணமும்
போற்று வார்கள்மெய் புளகம் ஏறுமே.

உரலும் வேதமும் தொடர: மறைகள் தொடரும் கண்ணனைக்கட்டப்பெற்ற உரலும் தொடர எனக்கொள்க. விரவி: கலந்து. மெத்தென: மெதுவாக. மெய்: உடம்பு. புளகம்: மயிர்க்கூச்சு.

Koviloor Digital Library

ஆரண னே!அர னே!புவ னங்கள்
அனைத்தையும் அன்றுஉதவும்

காரண னே!கரு ணாகர னே!கம
லாசனி காதலனே!

வாரண மே!பொது வே!ஒரு பேரிட
வந்தரு ளும்புயலே!

நாரண னே!முனி யேல்முனி யேல்என
நாகர்ப ணிந்தனரே.

இப்பாடல் துரியோதனன் சூழ்ச்சிசெய்து. கண்ண பிரானைக்குழியில் வீழ்த்திக் கொல்லமுயன்றபோது பேருரு எடுத்த கண்ணனைக் கண்டு அஞ்சி அவை யோர் கூறியது. ஆரணம்: வேதம். அரன்: சிவ பெருமான். கமலாசனி: திருமகள். வாரணம்: யானை. முனியேல்: கோபிக்காதே.

Koviloor Digital Library

மாதவ னே!முனி யேல்!எமை ஆளுடை
வானவ னே!முனியேல்!

யாதவ னே!முனி யேல்!இத யத்தில்
இருப்பவ னே!முனியேல்!

ஆதவ னே!முனி யேல்!மதி வெங்கனல்
ஆனவ னே!முனியேல்!

நீதவ னே!முனி யேல்!முனி யேல்!என
நின்று பணிந்தனரே.

இப்பாடலும் முன்பாடல் போன்றதே. மாதவன்: திருமகள் கேள்வன். யாதவன்: இடைக்குலத்தில் வளர்ந்த கண்ணன். ஆதவன்: கதிரோன். மதி: திங்கள். வெங்கனல்: கொடியநெருப்பு.

Koviloor Digital Library

நீலநெடுங் கிரியும்,மழை முகிலும், பவ்வ
நெடுநீரும், காயாவும் நிகர்க்கும் இந்தக்

கோலமும்வெங் கதை,வாளும், சங்கும் நேமி
கோதண்டம் எனும்படையும் குழைந்த வாச

மாலைநறும் துழாய்மார்பும் திரண்ட தோளும்,
மணிக்கழுத்தும், செவ்விதழும், வாரி சாதக்

காலைமலர் எனமலர்ந்த முகமும், சோதிக்
கதிர்முடியும் இம்மையிலே கண்ணுற் றேனே.

இப்பாடல், கன்னன் இறக்கும்போது கண்ட கடவுட் காட்சியைப்படம்பிடித்துக் காட்டுகிறது. நீல நெடுங் கிரி: பெரியநீலமலை. பவ்வம்: கடல். காயா: காயாம் பூ மரம். செவ்விதழ்: சிவந்த உதடு. வாரிசாதம்: தாமரை. இம்மை: இப்பிறப்பு.

Koviloor Digital Library

வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்!
மதிபெற்ற திருவுளத்தால் மதிக்கப் பெற்றேன்;

தேன்பெற்ற துழாய்அலங்கல் களப மார்பும்
திருப்புயமும் தைவந்து தீண்டப் பெற்றேன்;

ஊன்பெற்ற பகழியினுல் அழிந்து வீழ்ந்தும்
உணர்வுடன்நின் திருநாமம் உரைக்கப் பெற்றேன்;

யான்பெற்ற பெருந்தவப்பேறு என்னை அன்றி
இருநிலத்தில் பிறந்தோரில் யார்பெற் ருரே.

இது,தான்பெற்ற பேற்றைக் கன்னன் கூறுவதாக அமைந்த பாடல். மதிபெற்ற திருவுளம்: அறிவு நிரம்பிய சிந்தை. களபம்: கலவைச் சந்தனம். தைவந்து: தடவி. ஊன்: தசை. பகழி: அம்பு.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பெருந்தேவனார்

Koviloor Digital Library

Koviloor Digital Library

பொருப்புஅடைந்து தங்கள்
புலன்ஐந்தும் செற்று

நெருப்புஅடைந்து நீர்அடைய
வேண்டாம்;—விருப்புஅடைந்து

வைகுந்தம் சிந்தையிலே
வைப்பார்க்கு மாதவனும்

வைகும்,தம் சிந்தையுளே வந்து.

பொருப்பு: மலை. புலன்ஐந்தும் செற்று: ஐம்புலனை அடக்கி. வைகும் தம் சிந்தையுளே வந்து: தம் மனத்துள்ளே வந்து தங்குவான். வீடுபேறு அடைதற்கு மலை, தீ, நீர் முதலியவற்றுள் நின்று தவம் செய்யவேண்டாம். வைகுந்தத்தை மனத்தில் பதித்தால் போதும் என்பது கருத்து.

Koviloor Digital Library

தேன்ஓங்கு சோலைத்
திருவேங் கடம்என்றும்
வான்ஓங்கு சோலை
மலையென்றும்—தான்ஓங்கு
தென்அரங்கம் என்றும்
திருவத்தி யூரென்றும்
சொன்னவர்க்கும் உண்டோ துயர்.

வான் ஓங்கு சோலைமலை; விண்ணைமுட்டிய திருமாலிருஞ்சோலை. தென்னரங்கம்: திருவரங்கம். திருவத்தியூர்: காஞ்சியிலுள்ள ஆழ்வார் பாசுரம் பெற்ற ஒரு தலம். திருவேங்கடம் என்றும், சோலைமலை என்றும், அத்தியூர் என்றும் சொன்னவர்க்குத் துயர் இல்லை என்பது கருத்து.

Koviloor Digital Library

நீலமே! காரின்
    முகிலே! நெடுங்கடலின்

கோலமே! அத்திகிரிக்
    கோமானே!—மூலம்என

மாத்தா மரைமடுவின்
    மால்யானை ஓலமிடக்

காத்தாய்! கடைபோகக் கா.

காரின்முகில்: காளமேகம். கோலம்: அழகு. மூலம்: ஆதிமூலம். மாத் தாமரை மடு: சிறந்த பங்கயப் பொய்கை. மால் யானை: பெரிய யானை. ஓலமிட: அலற. கா: காப்பாற்று. யானையைக்காத்த நீ என்னையும் காப்பாற்றுவாயாக என்பது கருத்து.

Koviloor Digital Library

மூலம்என ஓலம்இடும்
முத்திப் பரம்பொருளின்
சீலம்அரும் சேவடியைச்
சிந்தியாய்;—ஞாலத்து
நெஞ்சே ! நிலைதளர்ந்து
நீதடுமா றுமல்வந்து
அஞ்சேல் எனும்காண் அவன்.

முத்திப் பரம் பொருள்: வீடளிக்கும் மேலான பொருள்.
சீலம் அரும் சேவடி: செம்மை பொருந்திய திருவடி.
சிந்தியாய்: நினை. அஞ்சேல்: பயப்படாதே.
திருமாலை நினைந்தால் தடுமாற்று வருங்கால் தடுத்து,
"அஞ்சேல்" என்று அருள்வான் என்பது கருத்து.

Koviloor Digital Library

மாண்ட பொழுதுஉன்
மலரடிகள் வந்துஅடியேன்
தீண்டும் படிஉன்
திருவருளால்—மூண்டஅமரில்
ஒன்ஞர் உடைய
ஒளிவளைவாய் வைத்துஊதும்
மன்ஞ! தருவாய் வரம்.

ஒன்ஞர்: பகைவர். உடைய: அழிய. ஒளிவளை வாய் வைத்து ஊதும் மன்ஞ!: ஒளியையுடைய சங்கத்தை வாயில் வைத்து ஊதுகின்ற கண்ணபிரானே! இறுதிக்காலத்தில் உன்திருவடிசேர வரம் அளிப்பாய் என்பது கருத்து.

Koviloor Digital Library

ஊன்கிடந்த இவ்வுடல்விட்டு
ஓடுவதன் முன்னமே

கான்கடந்த காலால்
கடல்கடந்து,—வான்கடந்த

மாதவனே! பாண்டவர்க்கா
மண்வேண்டிச் சென்றுஇரந்த

தூதுவனே! என்றென்றே சொல்.

தசைபொருந்திய இவ்வுடம்பைவிட்டு இவ்வுயிர் பிரிந்து ஓடுவதற்கு முன்னர் "வான்கடந்த மாதவனே!" என்றும், "சென்று இரந்த தூதுவனே" என்றும் சொல். கான்கடந்த கால்: காடு தாண்டிய இராமபிரான் திருவடி. கடல் கடந்ததும் அவன் சேவடியே. வான்கடந்த மாதவன்: மாவலிக்காகப் பேருரு எடுத்த பெருமான். பாண்டவர்க்காக மண்வேண்டிச் சென்று இரந்த தூதுவன்: கண்ணபிரான்.

Koviloor Digital Library

படர்ந்தனவும் பார்புதைப்பப்
பஞ்சவர்க்காத் தூது

நடந்தனவும் நச்சரவின்
உச்சிக்—கிடந்தனவும்

ஆன்தொடர்ந்த தாமரைதாம்
அல்லவோ? கானத்தின்

மான்தொடர்ந்த செந்தா மரை.

மாடுகளைத் தொடர்ந்து சென்ற செந்தாமரை ஒத்த திருவடிகள்தாம், உலகத்தை மூடி நிறைந்தன; பஞ்சவர்க்குத் தூதுநடந்தன; நச்சரவின் உச்சிக்கிடந்தன; கானகத்தில் மான்பின் நடந்தன என முடிக்க.

Koviloor Digital Library

Koviloor Digital Library

இளங்கோ அடிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

பெரியவனை, மாயவனை,
பேர்உலகம் எல்லாம்
விரிகமல உந்திஉடை
விண்ணவனை, கண்ணும்
திருவடியும் கையும்
திருவாயும், செய்ய
கரியவனைக் காணாத
கண்என்ன கண்ணே?
கண்இமைத்துக் காண்பார்தம்
கண்என்ன கண்ணே?

திருமாலின் நிறம் கருமை. உடம்பின் உறுப்புக்களாகிய கண்ணும், திருவடியும், கையும், திருவாயும் செம்மை நிறமுடையன என்பது கருத்து. கண்இமைத்து: கண்மூடி.

Koviloor Digital Library

மூஉலகும் ஈர்அடியால்
முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத்
தம்பியொடும் கான்போந்து,
சோஅரணும் போர்மடியத்
தொல்இலங்கை கட்டுஅழித்த
சேவகன்சீர் கேளாத
செவிஎன்ன செவியே?
திருமால்சீர் கேளாத
செவிஎன்ன செவியே?

தாவியசேவடி: ஓங்கி உலகளந்த திருவடி. சேப்ப: சிவப்புஏற. தம்பி: இளையபெருமாள். கான்: காடு. சோஅரண்: பெரியகோட்டை. சேவகன்: இராமபிரான். இராமபிரானும் திருமாலும் ஒன்றே என்பது இப்பாட்டின் கருத்து.

Koviloor Digital Library

மடம்தாழும் நெஞ்சத்துக்
கஞ்சனுர் வஞ்சம்
கடந்தானை, நூற்றுவர்பால்
நால்திசையும் போற்றப்
படர்ந்து, ஆரணம்முழங்க,
பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை, ஏத்தாத
நாஎன்ன நாவே?
'நாராய ணு!'என்னு
நாஎன்ன நாவே?

மடம்தாழும் நெஞ்சம்: அறியாமை தங்கிய மனம். நூற்றுவர்: துரியோதனுதியர். பாண்டவர்க்காகத் தூது நடந்த கண்ணனும், நாராயணனும் ஒருவரே என்பது பாட்டின் கருத்து.

Koviloor Digital Library

பாட்டு முதற்குறிப்பு அகராதி

தொடர் எண்	பாடல்	பாட்டு எண்	தொடர் எண்	பாடல்	பாட்டு எண்
1	அம்கையில்	24	14	கயம்படு	13
2	அராஅணை	12	15	கருமாமுகில்	7
3	அரியகங்குலில்	20	16	காயமும்	18
4	அரியதண்	27	17	குன்று எடுத்து	14
5	அருமறை	1	18	கோயில் ஆளுடைய	5
6	அழுதும் வாள்	23	19	சங்கை இலாவகை	19
7	ஆரணனே	38	20	சித்து அசித்தொடு	28
8	ஈர் ஒரு பிறப்பு	33	21	சீதநாள் மலர்	35
9	உரலும்	37	22	சேயபங்கய	9
10	ஊன்கிடந்த	47	23	ஞானம் ஆகிய	22
11	எக்கடலும்	2	24	தம்தம் உறியில்	16
12	எந்தஎந்த	29	25	தேடிய அகலிகை	3
13	ஒரு குலத்திடை	30	26	தேன் ஓங்கு	43

Koviloor Digital Library

பாட்டு முதற்குறிப்பு அகராதி (தொடர்ச்சி)

தொடர் எண்	பாடல்	பாட்டு எண்	தொடர் எண்	பாடல்	பாட்டு எண்
27	தொழுவார்தம்	6	40	மல்கொண்டு	36
28	நீலநெடுங்கிரி	40	41	மாண்ட	46
29	நீலமே	44	42	மாதவனே	39
30	படர்ந்தனவும்	48	43	மாதுலன் ஆகியும்	32
31	படர்ந்து கானகம்	25	44	மீனம் ஆகியும்	11
32	பாண்டவர்கள் புரிந்த	8	45	மீன் ஆமை	34
33	பூத்தநாபி	17	46	மூஉலகும்	50
34	பெரியவனை	49	47	மூலம் என	45
35	பேராறு	26	48	மேவரு	15
36	பேர் படைத்த	10	49	வலியில் அன்று	31
37	பொய்யாத தவமுனி	4	50	வான்பெற்ற	41
38	பொருப்படைந்து	42	51	வேதமும்	21
39	மடந்தாமும்	51			

Koviloor Digital Library

திருமகள் அச்சகம், காரைக்குடி.